ARIMA NOKKU
ISSN: 2320 - 4842
19-2 April 2025

Published on 14, April-2025 ISSN: 3049-2688 (Online)

# நூல்மரபா? எழுத்துமரபா? மொழியியல் பார்வை

**பேரசிரியர் ஒப்பிலா மதிவாணன்**
மேனாள் துறைத்தலைவர், தமிழ் இலக்கியத்துறை
சென்னைப் பல்கலைக்கழகம்

தொல்காப்பியம் பழமைக்குச் சான்று; இன்றைய மொழியியல் ஆய்வின் கருவூலம்; ஆராயும்தோறும் இடமளிக்கும் பொருண்மையும் பொருட்செறிவும் கொண்ட நூல். தொல்காப்பியர் இலக்கணப் புலவர் மட்டுமன்று; வரலாறு, அறிவியல், உயிரியல், பயிரியல் எனப் பல்திறம் அறிந்த பாவலர். தன் காலத்திற்கு முற்பட்ட இலக்கண, இலக்கியங்களைக் கற்றுணர்ந்தவர்; முன்னோர் மரபினை போற்றி ஏற்கும் மனத்தினர்; பிறர் கருத்துகளைத் தழுவிக்கொள்ளும் இயல்பினர், அவர் தம் காலத்து மக்கள் வழக்குச் சொற்களையும் எழுத்து வழக்குச் சொற்களையும் சீர்தூக்கி நினைந்து இலக்கணம் செய்திட்ட செம்மல். தொல்காப்பிய அதிகார வைப்பு முறையும் இயல்களுக்குப் பெயர் சூட்டியத் திறனும் சிந்திக்கதக்கவை; எழுத்ததிகாரத்தில் 'நூல்மரபு' என்று பெயரிட்டதற்கான காரணம் குறித்து உரையாசிரியர்களும் மொழியியல் அறிஞர்களும் நூல் மரபு என்றும், எழுத்து மரபு என்றும் இருவேறு கருத்தினைக் கொண்டுள்ளனர். இவ்விரண்டனுள் எது பொருத்தமானது என்பதை விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## தமிழ்மொழியின் சிறப்பு

உலகச் செம்மொழிகளுள் தமிழ்மொழியும் ஒன்று. தமிழ்மொழி மூவாயிரம் ஆண்டுகள் தொன்மையானது, செம்மொழிக்கான தகுதிகள் நிறைந்தது. 2004ஆம் ஆண்டு செம்மொழிக்கான தகுதி அறிவிப்புக் கிடைத்ததன் பின்னர், தமிழ்மொழி நூல்களின் மீதான உலகநாடுகளின் பார்வை அதிகரிக்கத் தொடங்கியது. பிற உலகமொழிகளில் தமிழ் இலக்கியங்கள் மொழிபெயர்ப்புச் செய்யப்பட்டு வருகின்றன. குறிப்பாகத் தொல்காப்பியமும் திருக்குறளும் குன்றின்மேலிட்ட விளக்காக ஒளிரத் தொடங்கியுள்ளன. பிறநாட்டுப் பல்கலைக்கழகங்களில் தமிழ் இருக்கைகள் உருவாக்கப்பட்டுள்ளன. தமிழ்மொழியின் சிறப்பினைப் பேசும் உரையாசிரியர் ச.பாலசுந்தரம் 'ஒரு மொழிக்கான சிறப்புத்தன்மைகளை விளக்கும் அடைமொழிகள், பிறமொழிகளைக் காட்டிலும் தமிழுக்கு உண்டு' என்பர். செந்தமிழ் என்பது இலக்கணவழக்கென்றும், தண்டமிழ், பைந்தமிழ், நறுந்தமிழ், முத்தமிழ், கன்னித்தமிழ் என்பன இலக்கிய வழக்கு என்றும் உரைப்பர்.

மேற்குறித்தவற்றுள் தண், பைந், நறுந், முத், கன்னி ஆகியவைப் பண்பினை உணர்த்தும் பெயரடைகள். சொற்களும் சொற்றொடர்களும் செப்பம் செய்யப்பட்டு, இலக்கிய வடிவம் பெற்றவை 'செந்தமிழ்' என்றும், அவ்வாறில்லாமல் இயற்கையாக வழங்கும் நிலையை 'நறுந்தமிழ்' என்றும், கிளைத்துப் பெருகிய நிலையை வண்டமிழ் என்றும் குறிப்பிடுவர்.

## எது மரபு

தொல்காப்பியம் மரபினைப் போற்றும் நூல். அக்கருத்தை வழிமொழியும் நன்னூலாரும், ‘எப்பொருள் எச்சொல்லின் எவ்வாறு உயர்ந்தோர், செப்பினர் அப்படிச் செப்புதல் மரபே’ என்றுரைப்பர். உலகவழக்கு செய்யுள் வழக்கு ஆகிய இருவழக்கிலும், சொற்களின் பொருள் நிலைமாறுபடாமல் உயர்ந்தோர் வழக்கினைப் போற்றிப் பின்பற்ற வேண்டுமென்று வலியுறு த்துவர் தொல்காப்பியர். பின்வரும் நூற்பாக் கள் அக்கூற்றினை வலியுறுத்துவனவாகும்.

**மரபுநிலை திரிதல் செய்யுட்கு இல்லை**
(மரபியல் 91)

**மரபுநிலை திரியின் பிறிது பிறிதாகும்**
(மரபியல் 92)

**மரபுநிலை திரியா மாட்சிய ஆகி**
**உரைபடு நூல்தாம் இருவகை இயல**
(மரபியல் 94)

**வினையின் தோன்றும் பாலறி கிளவியும்**
**பெயரின் தோன்றும் பாலறி கிளவியும்**
**மயங்கல் கூடா தம் மரபினவே**
(கிளவியாக்கம்11)

**மெய்பெறு மரபின் தொடைவகை தாமே**
(செய்யுளியல்101)

போன்ற தொல்காப்பிய நூற்பாக்கள் நினையத்தக்கவை. செய்யுள்களில் சொல்மரபு திரித்துக் கூறுதல் இல்லை; மரபுவழியில் கூறவில்லை எனில் பொருள் வேறுபடும்; ‘மரபு நிலை’ திரியின் சென்ற காலத்துச் செய்த இலக்கியம் இக்காலத்தும், இக்கால த்துச் செய்யப்படும் இலக்கியம் எதிர்காலத் துப் பயன்படாமல் ஒழியும் ஆதலின் மரபு வற்புறுத்தப்பட்டது என்பர். மரபுநிலை திரியாது சிறப்புடன் உரைபடும் நூல்கள் இரண்டு, அவை முதல் நூலும் வழிநூலும் ஆகும். இங்கு நூல் செய்ய விழைவோர், சொல்லப்படும் பொருளினது மரபுநிலை திரியாது ஆக்கவேண்டும் என்னும் கருத்து வலியுறுத்தப்படுகிறது.

## எது நூல்?

மனித இனம் சமுதாயத்தோடு பிணைந்தது; ஒன்றில்லாமல் மற்றொன்று அமைதல் இல்லை. காரணம் சமுதாய வட்டத்திற்குள் வாழ்பவன் மனிதன். மனித வாழ்வுக்கும் வளர்ச்சிக்கும் கருத்துப்பரிமாற்றம் நடைபெற வேண்டும். அதற்கு ஒரு மொழி தேவை. தமிழ் இனத்தின் மொழி தமிழ்; அதுபோல பிற இனத்தாருக்கும் நாட்டினருக்கும் மொழி உண்டு. அதிலொன்றும் குறைவில்லை. ஆறறிவு பெற்றுள்ள மனித இனத்திற்குப் பல மொழிகள் உண்டு. அதுபோல விலங்குகளும் பறவைகளும் கருத்துப்பரிமாற்றம் செய்து கொள்கின்றன. அவை எழுப்பும் ஒலிகளுக்கும் பொருள் உண்டு. அதுவும் மொழிதான். ஆகவே மொழிக்கு அடிப்படை ஒலி, அந்த ஒலியின் வளர்நிலை எழுத்து, அது நூல் இயற்றுவதற்கான கருவிகளுள் ஒன்று.

அந்தக் கருவியின் பரிணாமவளர்ச்சியே மொழி. அம்மொழியுள் விளையும் இலக்கிய இலக்கணங்களே நூல் என்பதாகும். நூலின் தொடக்கமும் முடிவும் முரணுதலின்றியும் (செய்யுளியல் 165), பத்துவகைக் குற்றங்கள் இன்றியும், 32வகை உத்திகள் பொருந்துமாறு அமைவது (மரபியல் 97) நூலின் தன்மை யாகும் என்பர். நூல், புலம், இலக்கணம், செய்யுள், நிலம், இலக்கியம் இவை யாவும் ‘நூல்’ என்பதையே குறிக்கும்.

## நூல் மரபு – பெயர்க்காரணம்

எழுத்ததிகாரத்தின் ஒன்பது இயல்களுள் முதல் இயலாக அமைவது நூன்மரபு. இப்பெயருக்கானகாரணங்களை மொழியியல் அடிப்படையிலும்மொழியியல் அறிஞர்களின் சிந்தனை மரபிலும் விளக்கம் பெறலாம்.

மனிதனின் கருத்துப்பரிமாற்றம் வரலாற்றுக் காலத்திற்கு முன்பே தொடங்கியதாகக் கருதலாம். மனிதனின் கருத்துப்பரிமாற்ற சிந்தனையானது, சைகையில் தொடங்கி, ஒலிகள், சிறுசொற்கள், சிறுகோடுகள், சித்திர எழுத்துகள், குறியீடுகள் என்று பரிணாம வளர்ச்சிப் பெற்று ‘எழுத்து’ என்னும் வடிவத்தைப் பெற்றுள்ளது. மொழியைக் கட்டமைத்து, வாய்மொழி இலக்கியங்கள் வழியாகக் கருத்துகளை வெளியிட்டுப் பின்பு நூலாக்கத்திற்குப் பெயர்ந்தான் மனிதன் என்பதை ஒரு படிநிலை வளர்ச்சியாகக்

கொள்ளலாம்.

“தொல்காப்பியர் தமிழ்மொழியைப் பலவாறாகத் துருவியாய்ந்த ஆசிரியர்; அதன் வரவும் செலவும் இருப்பும் நன்றாகக் கணக்கிட்டவர்” என்பர் அறிஞர் வ.சுப. மாணிக்கனார். அதற்கேற்ப தொல்காப்பியர் பன்னிரண்டு உயிர்ப்பிசை ஒலிகளையும் பதினெட்டு ஒற்றொலிகளையும் மூன்று சார்மொழிகளையுமே எழுத்தொலி என்பர். அதனால் எழுத்தொலி இலக்கணங்களைக் கூறும் முதல் இயலுக்கு ‘நுன்மரபு’ எனப்பெயரிட்டுள்ளார். பண்டைய உரையாசிரியர்களும் இன்றைய மொழியியல் ஆய்வறிஞர்களும் ‘நூல் மரபு’ என்னும் பெயருக்கான காரணத்தைச் சிந்தித்துள்ள திறம் நோக்குதற்குரியது.

### பண்டைய உரையாசிரியர் விளக்கம்

‘நூல்மரபு’ என்னும் இயலுக்குத் தொல்காப்பியர் பெயரிட்டக் காரணம் ஒப்பிட்டுப் பார்க்கத்தக்கது. இக்கருத்தில் பண்டைய உரையாசிரியர்களும் தற்கால மொழியியல் அறிஞர்களும் ஒட்டியும் வெட்டியும் கருத்துரைத்துள்ளனர்.

### நச்சினார்க்கினியர் கருத்தும் மறுப்பும்

‘தொல்காப்பியம் என்னும் நூற்கு மரபாந்துணைக்கு வேண்டுவனவற்றைத் தொகுத்து உணர்த்தினமையின் நூன்மரபு என்னும் பெயர்த்தாயிற்று’ என்பர் நச்சினார்க்கினியர். எழுத்து, சொல், பொருள் ஆகிய மூன்று அதிகாரங்களுக்கும் பொதுவான இலக்கணம் கூறுவதால் நூல்மரபு எனப்பட்டது என்பது அறியத்தக்கத்து. நூல்மரபில் கூறப்பட்ட இலக்கணம் தொல்காப்பியத்தின் மூன்று அதிகாரங்களுக்கும் பொதுவாக அமைந்திருக்க வேண்டும். ஆனால் செய்கை இயலுக்கும் (புணர்ச்சி விதிகள் பற்றியது) செய்யுளியலுக்கும் மட்டும் கருவியாக அமைந்துள்ளது. எனவே நச்சினார்க்கினியர் விளக்கம் பொருத்தமன்று என்று சிவஞான முனிவர் மறுத்துரைப்பர்.

### இளம்பூர்ணர் கருத்தும் மறுப்பும்

‘நூன்மரபு’ எழுத்துகளின் பண்புகளை எடுத்துக்கூறுகின்றது. எழுத்து, எட்டுவகையால் உணர்த்தப்படுகின்றன என்று இளம்பூரணர் கூறுவர். அவை, எழுத்து இனைத்தென்றலும் (தொகை, வகை, விரி) இன்ன பெயரின என்றும், இன்ன முறையின என்றும், இன்ன அளவின என்றும், இன்ன பிறப்பின என்றும், இன்ன புணர்ச்சியின என்றும், இன்ன வடிவின என்றும், இன்ன தன்மையின என்றும் கூறுவர்.

‘எழுத்ததிகாரத்தில் சொல்லப்படும் எழுத்தின் இலக்கணத்தை, நூன்மரபு என்னும் இயலில் ஓராற்றான் தொகுத்து உணர்த்துதலின் நூல்மரபு என்னும் பெயர்த்து. இதனுட் கூறுகின்ற இலக்கணம் மொழியிடை எழுத்திற்கன்றித் தனிநின்ற எழுத்திற்கென உணர்க’ என்பது இளம்பூரணர் கருத்து.

அவ்வாறாயின், தொல்காப்பியர் இந்த இயலுக்கு எழுத்ததிகார மரபு என்று கூறியிருப்பார். எனவே இளம்பூரணர் விளக்கம் பொருத்தமன்று எனச் சிவஞான முனிவர் மறுத்துரைப்பர். ‘எழுத்துகளின் இயல்பே இவ்வியல் முழுதும் கூறப்பட்டதனால், இஃது எழுத்துமரபு என்றவாறாயிற்று என்றல் அமைவுடையது. மொழியின் இயல்புணர்த்திய இயல் மொழிமரபு எனப்பட்டவாறுபோல’ நூல் என்றது ஈண்டு எழுத்தினை உணர்த்திற்று என்று வேங்கடராஜீலு ரெட்டியார் காரணம் சுட்டுவர். நூல் என்பதற்கு எழுத்து என்னும் பொருள் உண்டு. இதற்கு மேற்கோள் உண்டா? என ஆராய்தல் வேண்டும் என்றும் கூறுவர்.

### மொழியியல் ஆய்வறிஞர் கருத்து

1.ஈண்டுக் கூறப்படும் எழுத்தானது, குறில், நெடில், உயிர், மெய் என்ற தொடக்கத்துப் பெயர் நூலின்கண் ஆளுதல் பொருட்டு, முதல்நூல் ஆசிரியனால் செய்து கொள்ளப் பட்டமையின், அவை நூன்மரபு பற்றிய பெயர் ஆயின என்று அறிக எனச் சிவஞானமுனிவர் கூறுவர். நூலினது மரபு பற்றிய பெயர் கூறுவதால் நூல்மரபு எனப்பட்டது என்பது அவர் கருத்து.

2.பி.சா. சுப்பிரமணிய சாத்திரியார், “இந்நூலின்கண் வழங்கப்படும் எழுத்து, குற்றெழுத்து, நெட்டெழுத்து, உயிர், மெய், வல்லெழுத்து, மெல்லெழுத்து, இடையெழுத்து என நூற்கு இன்றியமையா மரபு பற்றிய குறிகளை விதிக்கும் இயல் ஆதலின் இவ்வியல் நூல்மரபு எனப்பெயர் பெற்றது என விளக்குவர். இவர் சிவஞானமுனிவர் கருத்தையே ஒப்புவர்.”

3.பேராசிரியர் செ.வை.சண்முகம், தொல்காப்பியர் முதன் முதலில் எழுத்ததிகாரத்தை மட்டும் எழுத நினைத்திருப்பார். ஆதலால் நூல் என்பது எழுத்ததிகாரத்தையே குறிக்கும். பின்னால் சொல், பொருள் அதிகாரங்களை எழுதி இருப்பார் எனக் கூறுகின்றார். இக்கருத்து மேலும் ஆராயத்தக்கது.

4.பேராசிரியர் பொற்கோ, நூல் என்பதற்கு ஒழுங்கு என்னும் பொருள் உண்டு. மரவேலை செய்யும் தச்சன், நூலைப் பிடித்துத் திட்டம் செய்வர். அதன்பின் துணைக்கருவியைக் கொண்டு தமது பணியை நிறைவேற்றுவர். அதுபோன்று, நூல் செய்வதற்கான திட்டமிடுதலில் எழுத்து ஒரு கருவியாகப் பயன்படுவதால், நூல்மரபு என்னும் பெயர் வழங்கலாயிற்று எனக் கூறுவர்.

5.பேராசிரியர் க. பாலசுப்பிரமணியன் தொல்காப்பியத்தை ஊன்றி ஆராய்ந்தவர். அவரது ‘தொல்காப்பிய இலக்கணமரபு’ நூலின் இரண்டாவது கட்டுரை முழுதும் நூல்மரபு குறித்த ஆராய்ச்சியுரையாகும். நூல் மரபில் கூறப்பட்டுள்ள செய்திகள் தொல்காப்பியம் முழுவதற்கும் உரியவை என்பதை நிறுவியுள்ளார். நூன்மரபு குறித்து நச்சினார்க்கினியர் கருத்தை ஏற்றுக்கொண்டுள்ளார்.

6.பேராசிரியர் வ.ஜெயதேவன் நூல் என்பது இலக்கணத்தைக் குறிக்கும்; இலக்கண நூலுக்கு அடிப்படையான மரபுகளைப் பேசுவதால் நூல் மரபு என்னும் பெயர்க் காரணமாயிற்று என்பர்.

1.பேராசிரியர் பெ. மாதையன் தொல்காப்பியத்தையும் சங்க இலக்கியத்தையும் தோய்ந்து ஆராய்ந்தவர். அவர், நூல் என்பதற்கு எழுத்து எனப்பொருள் கொள்ள இயலாது. இருந்தபோதிலும் இவ்வியலில் எழுத்து மரபே பேசப்படுகிறது என்பதாலும்; இதை தொல்காப்பிய நூல் முழுமைக்குமான மயங்கா மரபின் எழுத்துமுறை காட்டும் இயலாகக் கொள்வதே முறை. தொல்காப்பியத்தை ஒருங்கிணைந்த இலக்கணமாக, ஓராசிரிய இலக்கணமாகக் கொள்ளுகையில், இதுவே பொருத்தமாக அமைகிறது. மரபுநிலை திரியின் பிறிது பிறிதாகும் என இவர் கூறுவதால், தமிழுக்கே உரிய எழுத்து மரபை உணர்த்துவதை முன்வைப்பதே நூல்மரபின் அடிப்படை என்பர்.

பேராசிரியர் கு.வெ. பாலசுப்ரமணியன், நூல்மரபு என்பது ஆகுபெயர், நூலுக்கு முதலான எழுத்துகளைப் பற்றியது என்பதால் நூல்மரபு எனச்சுட்டப்பட்டது. இது முதலாகு பெயர் என்பர்.

நூல்மரபு என்னும் பெயருக்கான காரணத்தைத் தொல்காப்பியர் மரபியலில் தெளிவுபடுத்தியுள்ளார். செய்யுள் செய்யும் சான்றோர் மரபுநிலை பிறழாது செய்யுள் செய்வர் என்பதாலும் (மரபியல் 90), சான்றோரால் வழங்கப்பட்டுவரும் மரபுநிலை திரியின், காலந்தோறும் சொற்பொருள் பிறிது பிறிதாகிவிடும் என்பதாலும் (மரபியல் 91), மரபுநிலை திரியாத நூலே மாட்சிமையுடையது என்பதாலும், அந்நூல் முதல்நூல் வழிநூல் என்று இருவகைப்படும் என்பதாலும் (நூற்பா 92), நூல் செய்வதற்கான அடிப்படைக்கருவி எழுத்து என்பது வலியுறுத்தப்படுகிறது. அவ்வெழுத்துகளின் பண்புகளும் தன்மைகளும் நூல் செய்வதற்கான மரபுகளையே பேசுகின்றன. ஒரு நூல் செம்மையாக நல்ல தமிழ் நடையில் அமைவதற்கான எழுத்து மரபுகளைப் பேசும் இயல் ஆதலின், நூல்மரபு என்று பெயரிட்டுள்ளமையே பொருத்தமானதாகும்